**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 329 - தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 39.40 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 30.80 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 8.60 மில்லியன் அதாவது 21.83 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 37.16 | 28.65 | 8.51 | 22.90 |
| மூலதனம் | 2.24 | 2.15 | 0.09 | 4.02 |
| **மொத்தம்** | **39.40** | **30.80** | **8.60** | **21.83** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.00 | 1.86 | 0.30 | 0.80 | 8.00 | 3.79 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 7002/0000/00/0429/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.06 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்குறிப்பிடப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

2014 சனவரி 01 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.4 ஆம் பிரிவின் பிரகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர் அதற்காக உரிய செலவின விடயங்களில் போதியளவு நிதியேற்பாடுகள் காணப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு போதியளவு நிதியேற்பாடுகள் கணப்படாத போது 3 செலவின விடயங்களுக்காக சேமிக்கப்பட்ட நிதியேற்பாட்டை மிகைத்து ரூபா 246,686 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.2 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் கீழ் அமைச்சு வளாகத்தினுள் திணைக்களங்களை இணைப்பதற்காக LAN (Local Area Network) முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானங்களை உழைக்கின்ற திணைக்களங்கள் மற்றும் திறைசேரி முகாமைத்துவ முறைமை இப்பொழுது ஒன்றுசேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 02 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 03 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 19 | 13 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 08 | 05 | 03 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | 00 |
| | **மொத்தம்** | **45** | **25** | **20** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட மட்டத்திலுள்ள 07 பதவிகள் உள்ளடங்கலாக 20 வெற்றிடங்கள் காணப்படுகின்றதுடன் அவற்றை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு புறம்பாக பிரச்சார உதவி உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளிற்கு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் உரிய பதவிகளிற்கான அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த பிரச்சார உதவி உத்தியோகத்தர் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற சேவைகளில் ஈடுபட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளிற்கு உள்ளீர்க்கப்பட்டதன் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்திற்கு இடம்மாற்றப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் அவ் உத்தியோகத்தர்களை அந்தப் பதவிகளிற்கு உள்ளீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.